INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY | DigitalAccess @Home

# வீட்டு வை-ஃபை (Wi-Fi) மற்றும் சாதனங்களுக்கான ஆதரவைப் பெறுங்கள்

## DigitalAccess@Home

住家数码共享计划

Skim 'Akses Digital@Rumah'

வீடுகளுக்கான மின்னிலக்கச் சேவைத் திட்டம்



**இப்போதே இணையத்தளத்தில் விண்ணப்பியுங்கள்!**

ஆதரவு பெறுவது

ஆதரவளிப்பு

# வீட்டிற்கு கம்பியில்லா இணையச் சேவை அல்லது இணையச் சாதனம் பெற உதவி தேவையா?

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் - மாணவர்கள், மூத்தோர், உடற்குறையுள்ளோர் ஆகியோரை உள்ளடக்கிய குடும்பங்கள் உட்பட - வீட்டிற்கு கம்பியில்லா இணையச் சேவையோடு, மடிக்கணினி அல்லது கைக்கணினி ஆகியவற்றுக்கான நிதியுதவிகளைப் பெறலாம்.

**QR குறியீட்டை வருடி இப்போதே விண்ணப்பியுங்கள்.**

## யார் விண்ணப்பிக்கலாம்?

**வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீட்டில்** வசிப்பவர்கள்

**குறைந்தது ஒரு சிங்கப்பூர் குடிமகனையாவது** கொண்டுள்ள குடும்பங்கள்

ஆதரவுக்குத் **தேவையான வருமான அளவைக்** கொண்டிருப்பவர்கள்

## ஒரு வகையான ஆதரவைத் தேர்ந்தெடுங்கள்:

- வீட்டிற்கான கம்பியில்லா இணையச் சேவை மட்டும்
- மடிக்கணினி மட்டும்
- கைக்கணினி மட்டும்
- வீட்டிற்கான கம்பியில்லா இணையச் சேவை + மடிக்கணினி
- வீட்டிற்கான கம்பியில்லா இணையச் சேவை+ கைக்கணினி

நீங்கள் கடந்த 3 ஆண்டுகளில் தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையத்திடமிருந்து வீட்டிற்கான கம்பியில்லா இணையச் சேவையையோ அல்லது ஒரு சாதனத்தையோ மீட்டிருக்கிறீர்களா? உங்களுக்கு அளிக்கப்படும் ஆதரவு காலாவதியாவதற்கு 2-3 மாதங்களுக்கு முன் நீங்கள் மீண்டும் விண்ணப்பம் செய்ய தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையம் உங்களுக்கு நினைவூட்டல் கடிதம், குறுஞ்செய்தியோடு/ அல்லது மின்னஞ்சல் அனுப்பும்.

# ஆதரவுக்குப் பிறகு நீங்கள் எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும்?

நீங்கள் எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் என்பதை அறிய QR குறியீட்டை வருடுங்கள்

| வீட்டிற்கான கம்பியில்லா இணைச் சேவை | பிரிவு 1 | பிரிவு 2 | பிரிவு 3 |
|---|---|---|---|
| | 36 மாதங்களுக்கு மேலான சந்தா | 36 மாதங்களுக்கு மேலான சந்தா | 36 மாதங்களுக்கு மேலான சந்தா |
| **500 Mbps வரை** | **$5 / ஒரு மாதத்திற்கு** $5.45/பொருள், சேவை வரியுடன் ஒரு மாதத்திற்கு | **$10 / ஒரு மாதத்திற்கு** $10.90/பொருள், சேவை வரியுடன் ஒரு மாதத்திற்கு | **$15 / ஒரு மாதத்திற்கு** $16.35/பொருள், சேவை வரியுடன் ஒரு மாதத்திற்கு |
| **1 Gbps வரை** | **$10 / ஒரு மாதத்திற்கு** $10.90/பொருள், சேவை வரியுடன் ஒரு மாதத்திற்கு | **$15 / ஒரு மாதத்திற்கு** $16.35/பொருள், சேவை வரியுடன் ஒரு மாதத்திற்கு | **$20 / ஒரு மாதத்திற்கு** $21.80/பொருள், சேவை வரியுடன் ஒரு மாதத்திற்கு |

## வீட்டிற்கான கம்பியில்லா இணையச் சேவைபின்வருவனவற்றை உள்ளடக்கியது:

- 3 ஆண்டுகால இணைப்பு (ஒப்பந்தத்தின் கீழ் 2 ஆண்டுகள்)
- வீட்டுத் தொலைபேசிச் சேவை

| மடிக்கணினி அல்லது கைக்கணினி | பிரிவு 1 | பிரிவு 2 | பிரிவு 3 |
|---|---|---|---|
| | ஒரு முறை இணைக் கட்டணம் | ஒரு முறை இணைக் கட்டணம் | ஒரு முறை இணைக் கட்டணம் |
| **ACER மடிக்கணினி** 15.6" Intel Core i5 | **$220** $239.80 பொருள், சேவை வரியுடன் | **$445** $485.05 பொருள், சேவை வரியுடன் | **$665** $724.85 பொருள், சேவை வரியுடன் |
| **Lenovo மடிக்கணினி** 16" AMD Ryzen 5 | **$235** $256.15 பொருள், சேவை வரியுடன் | **$475** $517.75 பொருள், சேவை வரியுடன் | **$710** $773.90 பொருள், சேவை வரியுடன் |
| **Lenovo கைக்கணினி ~8"** | **$75** $81.75 பொருள், சேவை வரியுடன் | **$155** $168.95 பொருள், சேவை வரியுடன் | **$230** $250.70 பொருள், சேவை வரியுடன் |
| **Lenovo கைக்கணினி ~11"** | **$85** $92.65 பொருள், சேவை வரியுடன் | **$165** $179.85 பொருள், சேவை வரியுடன் | **$250** $272.50 பொருள், சேவை வரியுடன் |

## மடிக்கணினிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- பாகங்களுக்கு 3 ஆண்டு உத்தரவாதம்
- நச்சுநிரல் எதிர்ப்பு மென்பொருளுக்கு 3 ஆண்டு சந்தா
- மைக்ரோசா∴ப்ட் ஆபிஸ் (வீடு & மாணவர் திட்டம்)
- மடிக்கணினிப் பையும் சுட்டியும்

## கைக்கணினிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- பாகங்களுக்கு 3 ஆண்டு உத்தரவாதம்
- நச்சுநிரல் எதிர்ப்பு மென்பொருளுக்கு 3 ஆண்டு சந்தா

# எந்த ஆதரவுப் பிரிவு எனக்குக் கிடைக்கும்

நீங்கள் தகுதி பெறலாம் உங்களுடைய **மொத்த மாதாந்தர குடும்ப வருமானம்**:

- **$1,900 க்கும் குறைவாக, அல்லது**
- **தனிநபர் $650-க்கும் குறைவாக இருந்தால்.**

சில பிரிவுகள் மாதத்திற்கு $3,400 வரை/ ஒரு நபருக்கு $900 வரை அனுமதிக்கின்றன.

## பிரிவு 1

பின்வரும் குடும்பங்கள் பிரிவு 1 ஆதரவுக்குத் தகுதி பெறுகின்றன.

- வீடமைப்பு வளர்ச்சிக் கழகப் பொது வாடகைத் திட்டத்தில் வசிப்பவர், அல்லது
- சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சின் காம்கேர் திட்டங்களின் கீழ் இருப்பவர்கள், அல்லது
- கல்வி அமைச்சின் நிதியுதவித் திட்டத்தில் (FAS) குறைந்தது ஒரு குழந்தை இருப்பவர்கள் மற்றும் மொத்த மாதாந்தர குடும்ப வருமானம் ஒரு நபருக்கு $1,900 / $650 க்கும் குறைவாக உள்ளவர்கள்

## பிரிவு 2

மொத்த மாதாந்திர குடும்ப வருமானம் $1,900-க்கும் / ஒரு நபருக்கு $650-க்கும் குறைவாக இருக்கும் **1 முதல் 3 அறைகள் கொண்ட வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீட்டில்** வசிக்கும் குடும்பங்கள், பிரிவு 2 ஆதரவுக்குத் தகுதி பெறுகின்றன.

பின்வரும் குடும்பங்கள், உயர்ந்த மாதாந்திர வருமான உச்சவரம்புடன் தகுதி பெறலாம் — $3,400 வரை / ஒரு நபருக்கு $900 வரை:

- கல்வி அமைச்சின் நிதியுதவித் திட்டத்தில் (FAS) உள்ள பிள்ளைகளைக் கொண்டவர்கள்
- தொடக்கப்பள்ளிச் செல்லும் பிள்ளைகளைக் கொண்டவர்கள்
- தொடக்கப் பள்ளி மாணவருடன் இருப்பவர்கள்

## பிரிவு 3

மொத்த மாதாந்திர குடும்ப வருமானம் $1,900-க்கும் / ஒரு நபருக்கு $650-க்கும் குறைவாக இருக்கும் **4 அறை அல்லது அதற்கும் மேற்பட்டவீடமைப்பு வளர்ச்சிக் கழக வீட்டில்** வசிக்கும் குடும்பங்கள், பிரிவு 3 ஆதரவுக்கு தகுதி பெறுகின்றன.

பின்வரும் குடும்பங்கள், உயர்ந்த மாதாந்திர வருமான உச்சவரம்புடன் தகுதி பெறலாம் — $3,400 வரை / ஒரு நபருக்கு $900:

- தொடக்கப்பள்ளிச் செல்லும் பிள்ளைகளைக் கொண்டவர்கள்
- தொடக்கப் பள்ளி மாணவருடன் இருப்பவர்கள்



# விண்ணப்பிப்பதற்கான 5 படிநிலைகள்

**1**

**digitalaccess.gov.sg இணையத்தளத்திற்குச் சென்று சிங்பாஸ் வாயிலாக உள்நுழையவும்.** உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.





**2**

**சிங்பாஸ் வாயிலாக உங்கள் குடும்ப விவரங்கள் தானாகவே சேர்க்கப்படும்.** தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையம் உங்கள் குடும்ப உறுப்பினர்களிடம் அனுமதி கேட்க, குறுஞ்செய்தியோடு/ அல்லது மின்னஞ்சல் அனுப்பும். 21 வயதுக்குக் கீழுள்ள பிள்ளைகளுக்குப் பெற்றோர் அனுமதி வழங்கலாம்.


**3**



**தேவைப்பட்டால் கூடுதல் ஆவணங்களைத் தயார் செய்யுங்கள்.** உங்கள் பிள்ளைக்குப் பள்ளி நிதி ஆதரவு கிடைத்தால் அல்லது உங்கள் குடும்பத்தில் ஒருவருக்கு உடற்குறை இருந்தால் இது பொருந்தும்.


**4**

**நீங்கள் விண்ணப்பித்த பிறகு 10 வேலை நாட்களுக்குக் காத்திருங்கள்.** விண்ணப்பத்திற்கான முடிவு உங்களுக்குக் குறுஞ்செய்தி, மின்னஞ்சல், கடிதம் மூலமாக கிடைக்கும்.



**5**

**அங்கீகரிக்கப்பட்டால், உங்கள் வீட்டு வைஃபை அல்லது சாதனத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.** வீட்டு வைஃபைக்கு: தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு செல்லுங்கள். சாதனத்திற்கு: வழங்குநரைத் தொடர்பு கொள்ளுங்கள்.



# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

### 1. நான் வீட்டிற்கான கம்பியில்லா இணையச் சேவை, ஒரு சாதனம் என இரண்டையும் பெற வேண்டுமா?

இல்லை, நீங்கள் வீட்டிற்கான கம்பியில்லா இணையச் சேவை, சாதனம் என இரண்டையும் பெற வேண்டியதில்லை. உங்களுக்கு எது சிறந்தது என்பதை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம் - வீட்டிற்கான கம்பியில்லா இணையச் சேவை மட்டும், ஒரு சாதனம் மட்டும் அல்லது இரண்டும்.

உங்கள் அனுமதி 3 மாதங்களுக்குச் செல்லுபடியாகும். இந்தக் காலகட்டத்தில், நீங்கள் வீட்டு வைஃபை, ஒரு சாதனம் அல்லது இரண்டையும் — ஒரே நேரத்தில் அல்லது தனித்தனியாகப் — பெறலாம். உங்கள் அனுமதி காலாவதியாகிவிட்டு, நீங்கள் மற்றொரு தெரிவைப் பெற விரும்பினால், புதிய விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

---

### 2. நான் ஏற்கனவே வீட்டில் கம்பியில்லா இணையச் சேவைவைத்திருந்தால் என்ன செய்வது?

உங்கள் விரிவலை ஒப்பந்தம் குறித்து உங்கள் தற்போதைய இணைய வழங்குநரை நீங்கள் தொடர்புகொள்ளலாம். உங்கள் விரிவலை ஒப்பந்தம் குறித்து உங்கள் தற்போதைய இணைய வழங்குநரை நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

---

### 3. எனக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் உள்ளனர். நான் மேலும் ஒரு மடிக்கணினி அல்லது கைக்கணினிக்கு விண்ணப்பிக்கலாமா?

இந்தத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குடும்பமும் ஒரு மடிக்கணினி அல்லது கைக்கணினி மட்டுமே பெற முடியும்.

உங்களுக்கு மேலும் சாதனங்கள் தேவைப்பட்டால், உங்கள் பிள்ளையின் பள்ளி அல்லது கல்வி நிறுவனத்திடம் அவர்களின் மின்னிலக்க ஆதரவுத் திட்டங்கள் குறித்து தெரிந்துகொள்ள நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

---

### 4. நான் ஏற்கனவே, மூத்தோருக்கான திறன்பேசித் திட்டத்தின் கீழ் (MAS), சலுகை விலையில் ஒரு கைப்பேசியை மீட்டுள்ளேன். இதற்கு நான் விண்ணப்பிக்கலாமா?

வீடுகளுக்கான மின்னிலக்கச் சேவைத் திட்டம் மூத்தோருக்கான திறன்பேசித் திட்டம் (MAS) போன்றதல்ல. வீடுகளுக்கான மின்னிலக்கச் சேவைத் திட்டத்தில் நீங்கள்ஆதரவு பெற முடியுமா என்பதைத் தெரிந்துகொள்ள, www.imda.gov.sg/dah இணையத்தளத்தில் எங்கள் வினாப்படிவத்தை நீங்கள் பூர்த்தி செய்யலாம்.

### 5. நான் முன்பு வீட்டு வைஃபையைப் பெற்றுக்கொண்டேன் ஆனால் அப்போது சாதனத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. என்னால் மீண்டும் இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியுமா?

ஆம், நீங்கள் விண்ணப்பிக்கலாம். உங்கள் அனுமதி காலாவதியாகிவிட்டால், www.digitalaccess.gov.sg என்ற இணையதளத்தில் புதிய விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.

---

### 6. ஆதரவு எவ்வளவு காலத்துக்கு இருக்கும்?

**விரிவலை (வீட்டிற்கான கம்பியில்லா இணையச் சேவை):** சலுகை விலையில் ஃபைபர் விரிவலை சேவைக்கான ஆதரவு 3 ஆண்டுகள். அதற்கான மாதாந்திர கட்டணம் 36 மாதங்களுக்குச் செலுத்தப்படும்.

**சாதனங்கள் (மடிக்கணினி அல்லது கைக்கணினி):** ஒவ்வொரு சாதனமும் 3 ஆண்டு ஆதரவுடன் வருகிறது. இந்தக் காலகட்டத்தில், இத்திட்டத்தின் கீழ் மற்றொரு சாதனத்திற்கு நீங்கள் விண்ணப்பிக்க முடியாது.

மேல் விவரங்களுக்கு இங்கே வருடுங்கள்.



SG :DIGITAL OFFICE

## உதவி தேவையா?

**உங்களுக்கு அருகிலுள்ள சிங்கப்பூர் மின்னிலக்க சமூக நடுவத்தை (SG Digital Community Hub) அணுகுங்கள்.**
**go.gov.sg/sgdcommhub**

## எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்

IMDA-வை அழைக்க
**6377 3800**

**digitalaccess@imda.gov.sg**
முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்

எங்கள் **இணையம் வழியான உரையாடும் வசதியைப் பயன்படுத்துங்கள்**
**go.gov.sg/imda-dah-livechat**

விரைவான 3 நிமிட **விளக்கக் காணொளியைப்** பார்க்க வருடுங்கள்

திட்டத்தைப் பற்றி மேலும் அறிய QR குறியீட்டை வருடுங்கள்
**www.imda.gov.sg/dah**